FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129882

1. District : மாவட்டம் தஞ்சாவூர் PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 06/2025 Date: நாள் 23.09.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 18.09.2025 Date to : நாள் வரை 22.09.2025

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.00 மணி Time to : நேரம் வரை 11.00 மணி

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.09.2025 Time : நேரம் 07.00 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் - Time : நேரம் -

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் பெரியநாயகிபுரம் VAO அலுவலகம் சுமார் 7கிமீ தெற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் - District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. முகமது நிஸ்ஸாலி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முகமது

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 11.10.1971 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -

(f) Occupation : தொழில் தியாபாரம் (g) Address : முகவரி 2170, முஸ்லீம் தெரு, பெரியநாயகிபுரம், அஞ்சல் பேராவூரணி தாலுக்கா, தஞ்சாவூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

கு.கோவிந்தன், கிராம நிர்வாக அலுவலர், பெரியநாயகிபுரம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/9/25

A. Arun Prasad 23/9/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

23.09.2025 / 10.45 hrs

Name: பெயர் R. ARUN PRASAD
Rank: நிலை Inspector of Police.
VAC, Thanjavur.

<u>தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 06/2025, சட்டப் பிரிவு 7 of the PC Act 1988 (as amended in 2018), வழக்கின் முதல் தகவல் அறிக்கை Column-12இன் தொடர்ச்சி...</u>

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

இன்று 23.09.2025ஆம் தேதி காலை 07.00 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், ஆவணம், பெரியநாயகிபுரம் கிராமம், வீட்டு எண் 2/70, முஸ்லீம் தெருவைச் சேர்ந்த முகமது அவர்களின் மகன் முகமது கஸ்ஸாலி என்பவர் கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் M. முகமது கஸ்ஸாலி, த/பெ முகமது (லேட்), வீட்டு எண் 2/70, முஸ்லீம் தெரு, பெரியநாயகிபுரம் கிராமம், ஆவணம், பேராவூரணி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, தஞ்சாவூர். அய்யா, நான் தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தாலுக்கா, பெரியநாயகிபுரம் கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனது தாயார் கடந்த 2006 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். என்னுடன் உடன் பிறந்தவர்கள் (1) பாத்திமா கனி, (2) ரஹ்மனியா. (3) ருசியா பேகம், (4). ஜன்னத்துல் பிர்தௌவ்ஸ் ஆகிய 4 சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரர் அப்துல் கஜீப் ஆவார்கள். எனது தந்தை திரு.முகமது அவர்கள் கடந்த 12.08.2016 ஆம் தேதி இறந்துவிட்டார். எனது தந்தை திரு.முகமது (லேட்) பெயரில் இருந்த பேராவூரணி வட்டம், பெரியநாயகிபுரம் கிராமத்தில் பட்டா எண். 286 மற்றும் பட்டா எண். 613 ஆகியவற்றின்படி 0.03.5 ஏர்ஸ் இடத்துடன் கூடிய வீடு மற்றும் 0.26.5 ஏர்ஸ் புஞ்சை நிலம் ஆகிய சொத்துக்கள் வாரிசு அடிப்படையில் எங்களது அனுபவத்தில் இருந்து வந்தது. மேற்சொன்ன சொத்தினை கீரமங்களம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பாக பாத்திய விடுதலைப்பத்திரம் எண்கள் 1117/2024 மற்றும் 1574/2025 படி எனது சகோதர, சகோதிரிகள் அனைவரும் எனக்கு எழுதி கொடுத்துவிட்டார்கள். அதனடிப்படையில் எனது அப்பா முகமது பெயரில் உள்ள பட்டா எண் 286 இல் பழைய புல எண் 255/1, புதிய புல எண்.341/11-இல் உள்ள ரயத்துவாரி மனை 0.03.5 ஏர்ஸ் இடத்தினை மட்டும் எனது பெயருக்கு பட்டா

மாற்றம் செய்வதற்கு கடந்த 18.09.2025 அன்று காலை பெரியநாயகிபுரம் VAO திரு.கண்ணன் அவர்களை காலை சுமார் 11.00 மணியளவில் நேரில் சென்று அவரது ஆபிஸில் சந்தித்து பட்டா பெயர் மாற்றம் செய்து கொடுக்கும்படி கேட்டேன். அதற்கு அவர் எனது ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டு, ஆன்–லைனில் அப்ளை செய்துவிட்டு வருமாறும், பெயர் மாற்றம் செய்வதற்கு ரூபாய் 3,000/– செலவாகும் என்றும் சொன்னார். அதற்கு நான் பார்த்து செய்யுங்கள் சார் என்று சொன்னேன். அவர் நீங்கள் ஆன்–லைனில் விண்ணப்பம் செய்துவிட்டு வாருங்கள், ஆனால் செலவை குறைக்க முடியாது என்று கறாராக சொல்லிவிட்டு எனது ஆவணங்களை வாங்கி வைத்து கொண்டார். நான் மறுநாள் 19.09.2025 காலை, பேராவூரணி பழைய பஸ் ஸ்டான்டில் உள்ள இ–சேவை மையத்தில் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்தேன். ஒப்புகைச் சீட்டு எண் 2025/N103/21/034197, நாள்.19.09.2025 ஆகும். அன்றைய தினம் VAO திரு.கண்ணன் அவர்கள் மதியம் சுமார் 12.45 மணிக்கு எனது செல்போனுக்கு போன் செய்து, நான் ஆபீஸிலதான் இருக்கேன், பணம் எடுத்திட்டு வர்றீங்களா, என்று கேட்டார். அதற்கு நான், இப்ப என்னிடம் பணம் இல்ல சார், நாளைக்கு பார்த்துட்டு வரேன் என்று சொன்னேன். அதற்கு VAO கண்ணன் நாளைக்கு வேண்டாம், திங்கள் கிழமை வாங்கன்னு சொல்லிவிட்டு போனை வச்சிட்டார். அதன்படி நான் நேற்று 22.09.2025ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் ஆவணத்தில் உள்ள பெரியநாயகிபுரம் VAO ஆபிஸிற்கு சென்று, VAO கண்ணன் அவர்களை சந்தித்து, ஆன்–லைனில் பதிவு செய்யப்பட்ட ஒப்புகைச் சீட்டை காட்டினேன். அதற்கு VAO கண்ணன் அவர்கள் நீங்கள் ஆன்–லைனில் தப்பா பதிவு செய்துவிட்டீர்கள், பராவாயில்லை, நான் பாத்துக்குறேன், பணம் கொண்டு வந்திருக்கிறீங்களா என்று கேட்டார். அதற்கு நான் இப்போதைக்கு என்னிடம் பணம் இல்லை, பார்த்து செய்யுங்க சார்ன்னு, சொன்னேன். அதற்கு VAO அவர்கள் ஐநூறு குறைச்சிட்டு ரூ.2,500/– கொடுங்க அப்பதான் வேலையை முடிச்சிதர முடியும்னு சொன்னார். அதற்கு நான், நாளைக்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு VAO கண்ணன் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் கொடுக்க விருப்பமில்லை. எனவே, பட்டா பெயர் மாற்றம் செய்து

தருவதற்கு என்னிடம் ரூபாய் 2,500/- லஞ்சம் கேட்ட பெரியநாயகிபுரம் கிராம VAO திரு.கண்ணன் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஆன்-லைனில் பட்டா மாறுதலுக்கான விண்ணப்பித்து பெறப்பட்ட ஒப்புகை சீட்டு நகல், இரண்டு பாகபாத்திய விடுதலைப் பத்திரங்கள் ஆகியவற்றின் நகல்களை இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள, Sd – Mohamed Kasali, Sir, Received the complaint on 23.09.2025 at 07.00 hrs. The genuiness of the complaint was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since, the registration of regular case is warrented. The matter is intimated to the SP/CR, V&AC, Chennai and registered a case in Thanjavur V&AC Cr.No.06/2025 U/s of 7 of the PC Act 1988 as amended in 2018 on 23.09.2025 at 08.00 hrs and took for investigation. (sd) R. Arunprasasd, Inspector of Police, V&AC, Thanjavur. The original FIR along with original complaint along with documents is submitted to the court of the Hon'ble Principal District & Sessions Judge, Thanjavur and copies submitted to the concern officials.

A. Arunprasad 23/9/25

Inspector of Police,
V&AC,
Thanjavur.